www.Padasalai.Net

காஞ்சிபுரம் மாவட்டம்

# இரண்டாம் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2022

**A**

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

## கணக்குப்பதிவியல்

நேரம் : 1.30 மணி | மதிப்பெண்கள் : 50

### பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10 x 1 = 10

1. இருப்பாய்வைப் பாதிக்காத பிழைகள்
   அ) விதிப் பிழைகள் ஆ) அதிகமாகக் கூட்டுதல் பிழைகள்
   இ) குறைவாகக் கூட்டுதல் பிழைகள் ஈ) பகுதி விடு பிழைகள்
2. இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்தப்பட்ட கூலியை கூலிக் கணக்கில் பற்று வைப்பது
   அ) பகுதி விடு பிழை ஆ) விதிப்பிழை
   இ) முழு விடு பிழை ஈ) இருமுறை பதிந்த பிழை
3. கொள்முதல் ஏட்டின் மொத்தத் தொகை அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது. இப்பிழையை திருத்தம் செய்யும் போது, கீழ்க்கண்டவற்றில் எந்த கணக்கை பற்று வைக்க வேண்டும்?
   அ) கொள்முதல் கணக்கு ஆ) அனாமத்து கணக்கு
   இ) கடனீந்தோர் கணக்கு ஈ) மேற்கண்ட ஏதுமில்லை
4. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகையானது
   அ) ஆண்டுதோறும் அதிகரிக்கும் ஆ) ஆண்டுதோறும் குறையும்
   இ) அனைத்து ஆண்டுகளுக்கும் நிலையாக இருக்கும்
   ஈ) ஆண்டுதோறும் மாறக்கூடியது
5. தேய்மானம் எதனால் ஏற்படுகிறது?
   அ) காலப்போக்கு ஆ) பயன்பாடு இ) வழக்கொழிவு ஈ) அ,ஆ மற்றும் இ
6. ஒரு சொத்து எதன் காரணமாக வழக்கொழிவு அடைகிறது?
   அ) காலப்போக்கு ஆ) தேய்வு மற்றும் உராய்வு
   இ) தொழில்நுட்ப மாற்றங்கள் ஈ) மேற்கூறியவற்றில் ஏதுமில்லை
7. சொத்தின் இறுதி மதிப்பு என்பது பயனளிப்புக் காலத்தின் _______ அச்சொத்திலிருந்து கிடைக்கும் தொகையாகும்.
   அ) ஆரம்பத்தில் ஆ) இறுதியில் இ) மத்தியில் ஈ) இவைகளில் ஏதுமில்லை
8. புதியதாக நிறுவப்பட்ட இயந்திரத்தினை சோதனை ஓட்டம் மேற்கொள்வதற்குச் செய்த செலவு `20,000
   அ) தொடக்கச் செலவு ஆ) வருவாயினச் செலவு
   இ) முதலினச் செலவு ஈ) நீள்பயன் வருவாயினச் செலவு
9. நடைமுறை முதலை அதிகரிப்பதற்காக இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் பெற்ற நடுத்தர காலக் கடன் தொகை
   அ) முதலினச் செலவுகள் ஆ) வருவாயினச் செலவுகள்
   இ) வருவாயின வரவுகள் ஈ) முதலின வரவுகள்
10. வருவாயினச் செலவின் பலன் கிடைப்பது
    அ) கடந்த காலத்திற்கு ஆ) எதிர்காலத்திற்கு
    இ) நடப்பு காலத்திற்கு ஈ) எந்த கால்த்திற்கும்

### பகுதி - ஆ

II. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 17 கட்டாய வினா) 5 x 2 = 10

11. விதிப்பிழை என்றால் என்ன?
12. தேய்மானம் என்றால் என்ன?
13. நீள் பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன?
14. இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்தம் செய்யவும்.
    அ) விற்பனை ஏட்டில் மொத்தத் தொகையில் `100 குறைவாக கூட்டப்பட்டுள்ளது.
    ஆ) கொள்முதல் திருப்ப ஏட்டின் மொத்தத்தில் `200 அதிகமாக கூட்டப்பட்டுள்ளது

Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net



15. ஒரு நிறுவனம் ₹40,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. நிறுவுதல் செலவாக ₹2000 மேற்கொண்டது. இயந்திரத்தின் எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் 5 ஆண்டுகள். நேர்க்கோட்டு முறையில் ஆண்டுத் தேய்மானத் தொகையை கணக்கிடுக.

16. நிலை சொத்து ₹50,000 க்கு வாங்கபப்பட்டது. தேய்மான விகிதம் ஆண்டுக்கு 15% குன்றந்து செல் இருப்பு முறையில் இரண்டு ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகை கணக்கிடவும்.

17. பின்வருவனவற்றை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்படுத்தவும்.
   i) இரயில்வே துறைக்கு, இரயில் தண்டவாளம் அமைக்க செலுத்திய தொகை ₹50,000
   ii) பழைய அறைகலன் விற்றதில் ஏற்பட்ட நட்டம்
   iii) சரக்கு விற்பனையின் பேரில் செலுத்திய ஏற்றிச் செல் கட்டணம்

## பகுதி - இ

**III. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 24 கட்டாய வினா)** **5 x 3 = 15**

18. அனாமத்துக் கணக்கு பற்றி குறிப்பு எழுதவும்.

19. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

20. இருப்பாய்வு தயாரிக்கப்பட வேண்டி உள்ளது எனக் கருதி கீழ்கண்ட பிழைகளைத் திருத்தம் செய்யவும்.
   அ) விற்பனை ஏட்டில் ₹400 குறைவாக் கூட்டப்பட்டுள்ளது
   ஆ) விற்பனை திருப்ப ஏட்டில் ₹500 அதிகமாக கூட்டப்பட்டுள்ளது
   இ) கொள்முதல் ஏட்டில் ₹600 குறைவாக கூட்டப்பட்டுள்ளது
   ஈ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ₹700 அதிகமாக கூட்டப்பட்டுள்ளது
   உ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு ஏட்டில் ₹800 குறைவாக கூட்டப்பட்டுள்ளது

21. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு நேர்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க.
   1.1.2018 அன்று ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட இயந்திரம் வாங்கியது ₹38,000
   1.1.2018 அன்று பழுதுபார்த்தல் செலவு செய்தது ₹12,000
   இயந்திரத்தின் எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் 4 ஆண்டுகள்
   எதிர்நோக்கும் இறுதி மதிப்பு ₹6,000

22. பின்வரும் செலவுகளை முதலினம் அல்லது வருவாயினம் எனக் கூறவும்.
   அ) கட்டடம் கட்டியதற்கான தொகை ₹10,00,000
   ஆ) அறைகலன் பழுது பார்த்தது ₹50,000
   இ) கட்டிடத்தை வெள்ளை அடிப்பதற்கான செலவு ₹80,000
   ஈ) பழைய கட்டிடத்தை இடித்து புதிய கட்டிடம் கட்டியது ₹4,00,000

23. முதலின வரவு மற்றும் வருவாயின வரவு - வேறுபடுத்தவும்.

24. தேய்மானம் நீக்க வேண்டியதன் நோக்கங்கள் யாவை?

## பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3 x 5 = 15**

25. அ) இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்தவும்.
   i) இயந்திரம் நிறுவுவதற்குச் செலுத்திய கூலி ₹2000 கூலிக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது
   ii) விற்பனைத் திருப்ப ஏட்டில் ₹1000 குறைவாக கூட்டப்பட்டுள்ளது
   iii) ₹200க்கு சரக்கு கொள்முதல் செய்தது கொள்முதல் கணக்கில் ₹2000 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.
   iv) விற்பனை ஏட்டில் ₹1500 அதிகமாக கூட்டப்பட்டுள்ளது.
   v) முகிலுக்கு ரொக்கம் ₹2800 செலுத்தியது. அவர் கணக்கில் ₹2000 என பற்று வைக்கப்பட்டுள்ளது. *(அல்லது)*

Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net



ஆ) கீழ்காணும் பதிவுகளைத் திருத்தம் செய்யவும்.

| | விவரம் | பே.ப.எண். | பற்று ` | வரவு ` |
|---|---|---|---|---|
| a. | குமணன் க/கு ப | | 10,000 | |
| | ரொக்கக் க/கு | | | 10,000 |
| | (குமணனனுக்கு சம்பளம் கொடுத்தது) | | | |
| b. | செங்குட்டுவன் க/கு ப | | 6,000 | |
| | ரொக்க க/கு | | | 6,000 |
| | (செங்குட்டுவனுக்கு வாடகை செலுத்தியது) | | | |
| c. | ரொக்கக் க/கு ப | | 2,000 | |
| | விற்பனை க/கு | | | 2,000 |
| | (ரொக்கதிற்கு அறைகலன் விற்றது) | | | |
| d. | ரொக்க க/கு ப | | 10,000 | |
| | குமாரராசா க/கு | | | 10,000 |
| | (குமாரராசாவுக்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது) | | | |
| e. | மணிமாறன் க/கு ப | | 1,000 | |
| | கொள்முதல் க/கு | | | 1,000 |
| | (உரிமையாளர் மணிமாறனால் சொந்த உபயோகத்திற்கு சரக்கு எடுக்கப்பட்டது) | | | |

26. அ) கீழ்கண்ட விவரங்களைக் கொண்டு நேர்க்கோட்டு முறையில் இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பேட்டு பதிவுகள் மற்றும் இயந்திர கணக்கு தயாரிக்கவும்.

இயந்திரம் வாங்கிய நாள் 1.1.2016

| | |
|---|---|
| இயந்திரத்தின் விலை | `36,000 |
| வண்டிக் கட்டணம் | `2,500 |
| நிறுவுதல் செலவு | `1,500 |
| இயந்திரத்தின் வாழ்நாள் | 5 ஆண்டுகள் |

*(அல்லது)*

ஆ) 1.1.2016 அன்று `5000 மதிப்புள்ள அறைகலன் ஒன்று வாங்கப்பட்டது. நிறுவுதல் செலவுகள் `1000 குறைந்து செல் இருப்பு முறையில் ஆண்டுதோறும் 10% தேய்மானம் ஒதுக்க வேண்டும். முதல் இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பேட்டில் பதிவுகள் தருக.

27. அ) பின்வரும் நடவடிக்கைகளை முதலினம் மற்றும் வருவாயினமாக வகைப்படுத்தவும்.

i) சரக்கு விற்பனை வாயிலாகப் பெற்றது `75,000
ii) வங்கியிடமிருந்து பெற்ற கடன் `2,50,000
iii) முதலீடு விற்பனை செய்தது `1,20,000
iv) கழிவுப் பெற்றது `30,000
v) புதிய இயந்திரம் நிறுவுவதற்கான கூலி செலுத்தியது `1,400

*(அல்லது)*

ஆ) பின்வரும் செலவினங்களை முதலினம், வருவாயினம், நீள்பயன் வருவாயினச் செலவினங்களாக வகைப்படுத்தவும்.

i) மூன்று ஆண்டுகளுக்கு பயனளிக்கும் வகையில் செய்யப்பட்ட விளம்பர செலவு
ii) கட்டடம் பதிவு செய்யும்போது செலுத்திய பதிவு கட்டணம்
iii) பழைய கட்டடம் வாங்கிய போது அதனைப் பராமரித்து வண்ணம் பூசி பயன்படுத்துவதற்கு ஏற்றாற்போல் மாற்றியதற்கான செலவு.
iv) தணிக்கைக் கட்டணம் செலுத்தியது `10,000
v) தொழிலாளர் நலனுக்காகச் செய்த செலவு `5000

******

Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com